International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# மணிமேகலை காப்பியத்தில் மறு சமய மறுப்புக் கருத்துகள்

**நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு**
முனைவர்பட்ட ஆய்வாளர்

**முனைவர் ச. செந்தில்குமார்**
பேராசியர், நெறியாளர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரை, மணிமேகலையின் காப்பியப் போக்கினையும், பௌத்தத்தின் கருணை, துறவு, பசிப்பிணி நீக்கும் அறம் போன்ற உயரிய கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு, அது சமகாலத்தில் பிற சமயங்களின் கோட்பாடுகளையும், அவை முன்வைத்த தத்துவார்த்த வாதங்களையும் மணிமேகலை எவ்வாறு மறுக்கிறது என்பதை விரிவாக ஆராய முற்படுகிறது. காப்பியத்தின் மூலம், சமயம் என்பது வெறும் கோட்பாட்டு வாதமாக அல்லாமல், மக்கள் பசி நீக்கிப் பிறவித் துயரைப் போக்கும் கருணை வழியே சிறந்த அறம் என்பதை மணிமேகலை நிலைநாட்டும் பாங்கினைக் காணலாம்.

**முதன்மைச் சொற்கள்:** மணிமேகலை, காப்பியம், சமயங்கள், பௌத்தம், மறுப்பு, வாதங்கள்

**முகவுரை**

சங்க மருவிய காலத்திலே, தமிழகத்திற் பௌத்தம், சைவம், வைணவம், ஆசீவகம், சமணம் முதலான பல்வேறு சமயங்களும் தத்துவங்களும் வேரூன்றி, மக்கள் மத்தியில் தீவிரமான கருத்துப் பரிமாற்றங்களையும் விவாதங்களையும் நிகழ்த்திக்கொண்டிருந்தன. இத்தகையதொரு சமூக, சமயச் சூழலைச் சித்திரிக்க வந்த ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான **'மணிமேகலை'**, ஒரு காவியமாக மட்டுமல்லாமல், பௌத்த தத்துவத்தை நிலைநாட்டும் ஒரு சீரிய களஞ்சியமாகவும் விளங்குகிறது.

இக்காப்பியத்தின் மையப் பாத்திரமான மணிமேகலை, தனது துறவறப் பயணத்தில் வஞ்சி மாநகரை அடைந்து, அங்கு திரண்டிருந்த சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில், பல சமயங்களின் கோட்பாடுகளைக் கேட்டுணர்கிறாள். இது வெறுமனே கேட்டறிதல் என்ற நிலையுடன் நிற்காமல், காப்பியத்தின் இறுதிப் பகுதிகளிற் பௌத்தத்தின் உயரிய அறநெறிகளின் மூலம் பிற சமயக் கோட்பாடுகளைச் விவாதத்திற்கு உட்படுத்தி, அதன் "மறு சமய மறுப்பு" என்ற கருத்தியலை வெளிப்படுத்துகிறது.

**மணிமேகலையில் மறு சமயக் கருத்துகள்**

**ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்**
**பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்**

**பற்றாமாக்கள் தம்முடன் ஆயினும்**
**செற்றமும் கலாமும் செய்யாது**
**அகலுமின்** (மணி: விழாவறை காதை 60-63)

இதன் மூலம் அக்காலத்தில் சமய நெறியினை பின்பற்றியவர்களும், பற்றாதவர் களும் இருந்திருக்கின்றனர் என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. ஆனால் சாதியம் மிகக்கடுமையாகப் பார்க்கப்பட்டது என்பதற்குச் சுதமதியும் அவள் தந்தையும் ஒதுக்கப்பட்டமை மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மணிமேகலைக் காப்பியம் ஒரு பௌத்த நூலாக இருப்பதால், அதில் இடம்பெற்றுள்ள "மறு சமய மறுப்பு" என்பது, காப்பியத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அமைகிறது. மணிமேகலைக் காப்பியத்தின் 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை' (காதை 27) என்னும் பகுதிதான் மறு சமய மறுப்புக்கான அடிப்படையாகும்.

இக்கால கட்டத்திற் சமணநெறி நின்று வாழ்கின்றவர்கள் பலராக காணப்பட்டாலும், சமணம் மக்கள் மத்தியிலே தனது முக்கியத்துவத்தினை இழந்து காணப்பட்டது என்பதனை காப்பிய ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகிறார். விழாவறை காதையில் கள்ளுண்ட களிமகன் ஒருவன் ”காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி, உண்ணா நோன்போடு உயவல் யானையின் மண்ணா மேனியன்க ”(மணி- மலர் வனம் புக்க காதை 90-91) வருகிற சமணத் துறவியைப் கேலி செய்கிறான். இவ்வாறான கேலி சொற்களை யாரும் கடிந்ததாக எங்கும் குறிப்பிடப் படவில்லை.

அக்காலச் சமுதாயத்திற் சமயம், சமுதாய வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் தன்மை யினைக் காப்பியத்தின் மூலம் காணலாம். வஞ்சி மாநகருக்குச் சென்று அங்குள்ள சமயக் கணக்கரிடம் பல்வேறு உண்மை களைக் கற்றறியச் செல்லும் மணிமேகலை ஆண் வேடம் தரித்துச் செல்கிறாள். காரணம் “இளையோள் வளையோள் என்று உனக்கு யாவரும் விளைபொருள் உரையார் வேற்று உருக் கொள்க” (மணி-26-68-69) என்று கண்ணகியால் மணிமேகலைக்கு உணர்த்தப்படுகிறது. இதிலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்வது என்னவெனின் பெண் களில் அதிலும் நீ இளம் பெண், வளையல் அணிந்த பெண் என்று கூறி உனக்கு யாரும் தத்தமது சமய உண்மைகளை உரைக்க மாட்டார்கள், ஆதலால் நீ வேறு உருவம் கொள்க என்று கண்ணகி கூறுவதன் மூலம் அக்காலச் சமுதாயத்திற் பலதடைகள் இருந்திருக்கின்றன என்பது இதிலிருந்து புலனாகின்றதனைக் காணலாம்.

மணிமேகலை முன்னர் மணிமேகலா தெய்வத்தால் உபதேசித்த மந்திரத்தினை ஓதி, தவ முனிவன் வடிவம் பெற்று வஞ்சி நகரம் புகுந்து சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசிவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி என்று பல்வேறு சமயவாதிகளிடம் மணிமேகலை பாடம் கேட்பதாகச் சமயக் கணக்கர் திறம் கேட்ட காதை மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

**சமயக் கணக்கர் கொள்கைகள்**

வஞ்சி மாநகரில் மணிமேகலை பல்வேறு சமயவாதிகள் மற்றும் தத்துவங்களின் கொள்கைகள் சந்தித்து, கேட்டு அறிந்தாள். முதலாவதாகக் “குற்றமற்ற உண்மைப் பொருளை உரைப்பீராக” என தவவேடம் தாங்கிய மணிமேகலை முதன் முதலாக வைதிக மார்க்கத்தைச் சார்ந்த சமயவாதியி டம் “நீ பின்பற்றும் கொள்கையினைக் கூறுவீராக” (சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை) எனக் கேட்கிறாள்.

பளிக்கறை புக்க காதையில் எமது பிறவிக்கு வினைப்பயன் காரணம் என்று பேசப் படுகிறது. “வினையின் வந்தது வினைக்கு விளைவாயது” (பளிக்கறை.113) என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அதனை சைவசமயமும் கூறுகின்றது. ஒருவருடைய பிறப்பிற்குக் காரணம் அவர் செய்யும்

வினையின் பயன். மாணிக்கவாசகர் சுவாமி கள் அருளிய “திருவாசகத்திற் பிறவியின் தொடர் “புல்லாகிப் பூண்டாகி” என வரும் வரிகள் பிறவியின் தொடர்ச்சியைக் காட்டுவது மட்டுமல்ல, “எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்” என அவர் பாடியதன் மூலம் வினையின் பயன் மூலம் பிறவி தொடர்வதைக் காணலாம். திருக்குறளும் பிறவிகள் பயனைக் கூற மறக்கவில்லை. “பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேராதார்” (குறள்10-அறத்துப் பால்) என்றார்.

மணிமேகலை நேரடியாக ஒவ்வொரு சமயத்தையும் உடனடியாக மறுக்காமல், முதலில் அவற்றின் கொள்கைகளைக் கேட்டறிந்து கொள்கிறாள். பின்னர், பௌத்தத் தத்துவங்களான பன்னிரு நிதானம் மற்றும் நான்கு வாய்மைகள் ஆகியவற்றை நிறுவி, அறத்தின் வழியே மற்ற தத்துவங்களின் போதாமையையும் முரண்களையும் வெளிப்படுத்துவதன் மூலம் மறுப்பை முன்வைக்கிறாள்.

### பௌத்தமே தலைசிறந்தது என நிறுவுதல்

பிறசமயங்கள் கூறும் வீடுபேறு, கர்மக் கொள்கை, கடவுட்கொள்கை ஆகியவற்றின் மீது வினாக்களை எழுப்பி, பசிப்பிணி நீக்குதல், அமுதசுரபியின் அறம் மற்றும் துன்ப நீக்கம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட பௌத்தத்தின் கருணைமயமான அறமே சிறந்த மெய்யியல் என்பதை நிலை நாட்டுவதே மணிமேகலையின் முக்கிய மறுப்பு கொள்கையாகப் பேசப்படுவதை நோக்கலாம்.

### பிற சமயக் கருத்துகள்

மணிமேகலையிற் கூறப்படும் சமயக் கருத்துக்கள் ஏனைய சமயக் கருத்துக் களுடன் ஒத்துப்போகும் தன்மை காணப் படுகிறதா என்று பார்க்கின்றபோது ஒத்துப் போகின்ற கருத்துக்களும் பரவலாக் காணப் படுவது குறிப்பிடத்தக்கது. மணிமேகலைக் காப்பியத்திற் பௌத்தம் வலியுறுத்தும் சில முக்கியக் கொள்கைகள், அக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய மற்ற இந்தியச் சமயங்களான சமணம், ஆசீவகம், சைவ, வைணவக் கிளைச் சமயங்கள் ஆகியவற்று டன் ஒத்துப் போகின்றன. அதனடிப்படையில் ஊழ்வினைக் கருத்துக்கள், மறுபிறப்புக் கொள்கை, துறவுக்கொள்கை, அறவொழுக்கக் கொள்கைகள் எனும் கொள்கைகளுடன் ஒத்த கருத்தினைக் கொண்டு காணப்படுவதனைக் காணலாம்.

### கர்ம வினை: (ஊழ்வினை)

அனைத்துச் சமயங்களுமே வினைப்பயன் (கர்மம்) என்ற கொள்கையை ஏற்றுக் கொள்கின்றன. ஒருவன் செய்யும் நல்வினைக் கும் தீவினைக்கும் ஏற்பவே அவனது இன்ப துன்பங்கள் தீர்மானிக்கப்படுகின்றன என்ற அடிப்படை உண்மை பல சமயங்களிற் காணப்படுகிறது. மணிமேகலையும் பூர்வ பிறவிப்பிணி பற்றியும், கோவலன் கண்ணகி யின் ஊழ்வினை பற்றியும் பேசுகிறது. ஒருவருடைய கர்ம வினையின் பலனுக்கு ஏற்ப அவர்களது பிறவி அமைந்து, இன்ப துன்பம் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதனை பகவான் ஸ்ரீ கிருஸ்ண்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும் “பகவத்கீதை” உபதேசம் எமக்குக் கூறுகிறது.

### மறுபிறவி மற்றும் துறவு:

உலகியல் இன்பங்கள் நிலையற்றவை; மனிதன் மீண்டும் மீண்டும் பிறவிச் சுழற்சியிற் சிக்குவதே துயரங்களுக்குக் காரணம்; எனவே, இந்தச் சுழற்சியிலிருந்து விடுபட வேண்டும் (வீடுபேறு/முக்தி) என்ற கருத்தைச் சமணம், பௌத்தம், ஆசீவகம் போன்ற துறவறச் சமயங்கள் வலியுறுத்துகின்றன. மணிமேகலை தனது இளமையிலேயே துறவு பூண்டு, இந்த உலகம் மற்றும் பிறவித் துயரங்களிலிருந்து விடுபட முயல்வது துறவறக் கொள்கையின் வெளிப்பாடு ஆகும். நாயன்மார்களின் வரலாறுகள் கூறும் பெரியபுராணம் பல சிவனடியார்கள் இறைவன் மீது கொண்ட பக்தியின் சிறப்பும் அவர்கள் மேற்கொண்ட துறவின் வரலாறும் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுருப்பதைக் காணலாம். வைணவ ஆழ்வார்களின் நாலாயிரத்திவ்விய பிரபந்த பாடல்கள் மூலம் ஆழ்வார்கள் அடியவர்

களது துறவு நிலையினைக் காணலாம். திருமந்திரத்தில் துறவின் நிலையினை கூறும் பாடல்

**உழவன் உழவுழ வானம் வழங்க**

**உழவன் உழவினிற் பூத்த குவளை**

**உழவன் உழத்தியர் கண்ணொக்கு மென்றிட்டு**

**உழவன் அதனை உழவொழிந் தானே.**

(திருமந்திரம்–1593)

உழவன் என்பது ஆன்மா, உழவு என்து இறைவனை அடையச் செய்யும் முயற்சி, கண் போன்ற மலர் தியானத்தின் போது தோன்றும் இறைகாட்சி. அதாவது ஒருவன் இறைவனைத் தேடித் தவம் செய்யும்போது, இடையில் தோன்றும் சில அற்புதக் காட்சிகளிலோ அல்லது சித்துகளிலோ மயங்கி நின்றுவிட்டால், அவன் அடைய வேண்டிய இறுதி இலக்கை அடைய முடியாது என்பதனை விளக்கும் பாடலாக இது அமைகிறது.

### அறவொழுக்கம்

எல்லாச் சமயங்களும் பொதுவாக மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகள், நல்லொழுக்கங்கள் என்பவற்றை வலியுறுத்துகின்றன. கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புலால் மறுத்தல் முதலான ஒழுக்கங்கள் அனைத்து சமயங்களுக்கும் பொதுவானவை. இவை சைவ சமயத்தில் பஞ்சமா பாதகங்கள் என்று கூறப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. பௌத்தம் வலியுறுத்தும் அகிம்சை மற்றும் துறவற ஒழுக்கங்கள், சமணத்தின் ஒழுக்கங்களுடன் பெரும்பாலும் ஒத்துப்போகின்றன. சமணத்தின் முக்கிய கொள்கை கொல்லாமை ஆகும். இதுவே அகிம்சை என்று அழைக்கப்படுகிறது. இது சமணத்தின் அடிப்படை விதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. திருக்குறள் புலான் மறுத்தல் எனும் அதிகாரத்திற் கொல்லாமையை வலியுறுத்தி கூறப்பட்ட குறள்களில் ஒன்றை இங்கு குறிப்பிடலாம்.

**“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**

**எல்லா உயிருந் தொழும்”**

(திரு-புலான் மறுத்தல் 260)

இது போன்றே சைவசமயத்திலும் கொல்லாமை கூறப்படுவதைத் திருமந்திரம் மூலம் எடுத்துக்காட்டலாம்.

**பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்**

**மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்**

**நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்**

**உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே”** (திருமந்திரம்-197)

நம்மாழ்வார், ஆண்டாள், பெரியாழ்வார் முதலான வைணவ ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களிலும், திருக்குறள், திருமந்திரம் போன்ற பாடல்களிலும் கொல்லாமை முதலிய கொள்கைகள் வலியுறுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம். இவ்வாறு மணிமேகலை மற்ற சமயங்களோடு ஒத்துப் போகின்ற கருத்துக்களை கொண்டிருந்தாலும், முற்று முழுதாக அனைத்திலும் ஒத்த கருத்துக்களைக் கொண்டு காணப்படுகிறது என்று முழுமையாக கூறிவிட முடியாது பல இடங்களில் ஏனைய சமயக் கருத்துக்களை மறுத்து நிற்கும் இடங்களும் காணப்படுவது கண்கூடு. அந்த வகையில் மறுத்துக் கூறும் கருத்துக்களைப் பார்க்கும்போது மறுசமய மறுப்பு வேறுபடும் தன்மைகளை பார்க்கும் போது மணிமேகலையின் தனிச்சிறப்பும், மறுசமய மறுப்பு என்ற கோட்பாட்டின் முக்கியத்துவமும் இப்பொதுவான அடித்தளத்திலிருந்து பௌத்தம் வேறுபட்டு நிற்கும் இடங்களிலேயே வெளிப்படுகின்றன.

### மோட்சம் அல்லது கருணை

**பௌத்தம்:** மணிமேகலையிற் பௌத்தம் வலியுறுத்தும் இறுதி நோக்கம், தனிப்பட்ட முக்தியை விட, உலகத் துயரத்தைப் போக்குதல் மற்றும் அனைத்து உயிர்களுக்கும் உதவி செய்தல் (கருணை/அறம்) என்பதாகும். அமுதசுரபி மூலம் பசிப்பிணி நீக்குதல், மகாயான பௌத்த (Mahayana Buddhism) கருணையின் உச்ச வடிவமாகும். ஏனையவை பல சமயங்கள் (உதாரணமாக,

சமணம்) தனிப்பட்ட முக்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது, பௌத்தம் சமூக அறத்தையும், சேவை மனப்பான்மை யையும் முதன்மைப்படுத்துகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கடவுட் கொள்கை மற்றும் தத்துவார்த்தம்**

**பௌத்தம்:** பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய கடவுள்களைப் போற்றும் சமயவாதிகள் கூறும் இறைவனைப் படைப்புக் கடவுளாக முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல், புத்தரின் அறக் கோட்பாடுகளையும், தர்க்கரீதியான தத்துவங்களையும் (அளவைவாதம்) முதன்மைப்படுத்துகிறது. "சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில், மணிமேகலை மற்ற சமயக் கருத்துக்களைக் கேட்டு, அவற்றின் கோட்பாடுகளில் உள்ள தர்க்க முரண்களை (Logical fallacies) அறிவால் அணுகிப் பின்னர், பௌத்தத்தின் நான்கு வாய்மைகள் மற்றும் பன்னிரு நிதானம் ஆகியவற்றை முழுமையாக உணர்வதன் மூலம், அவற்றின் பூரணமற்ற தன்மையை மறைமுகமாக மறுத்து, பௌத்தமே நிறைவானவழி என்பதை நிலைநிறுத்துகிறாள். சுருக்கமாக, அடிப்படை அறக் கோட்பாடு களிலும் கர்மக்கொள்கையிலும் ஒத்திருந்தா லும், அந்த அறத்தைக் கடைப்பிடித்து, பிறவித் துயரைக் களைவதற்கான சிறந்த வழிமுறை கருணையின் அடிப்படையில் அமைந்த சமூகப் பார்வை ஆகியவற்றால் மணிமேகலை கூறும் பௌத்தக் கருத்துக்கள் மற்றவற்றிலிருந்து வேறுபடுகின்றன என்பது அறியப்படுகிறது.

மணிமேகலையின் மறு சமய மறுப்புக் கொள்கை குறிப்பாகச் சைவசமயக் கருத்துக் களுடன் ஒத்துப்போகாதநிலை காணப்படு கின்றதா என நோக்கும் போது சைவ சமயத்தின் சிலஅடிப்படைக் கருத்துக்களுடன் மணிமேகலையின் மறுப்புக் கொள்கை ஒத்துப் போவதில்லை, மணிமேகலைக் காப்பியத்தின் நோக்கம் பௌத்தத்தை நிலைநிறுத்துவதால், அது தனது சமகாலச் சமயக் கருத்துக்களில் உள்ள தத்துவார்த்தப் பேதமைகளைச் சுட்டிக்காட்டுகிறது. சைவ சமயத்தைப் பொறுத்தவரையில், பௌத்தம் மறுக்கும் முக்கியக் கருத்துக்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**கடவுட் கொள்கை (படைப்புக் கடவுள்)**

சைவ சமயவாதி, ஈசன் (சிவன்) தான் முழுமுதற் கடவுள் என்றும், அவரே அனைத்தையும் படைத்துக் காத்து அழிப்பவர் என்றும், அவர் எட்டு வகையிலும் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள், இயமானன்) கலந்து இருப்பவர் என்றும் மணிமேகலையிடம் கூறுவதாகக் காப்பியம் குறிப்பிடுகிறது. பௌத்தக் கொள்கையின்படி, இவ்வுலகம் காரண காரியத் தொடர்ச்சியின் (Chain of Causation - பன்னிரு நிதானம்) அடிப்படையில் உருவானது. ஒரு நிரந்தரமான படைப்புக் கடவுள் (Ultimate Creator) இல்லை. துக்கத்தின் மூலம் விடுதலை அடைவதே முக்கியம் எனக் கூறுகிறது. எனவே, படைத்தல், காத்தல், அழித்தல் முதலான செயல்களைச் செய்யும் தனிப்பட்ட முழுமுதற் கடவுள் என்ற கருத்தை பௌத்தம் ஏற்றுக் கொள்வதில்லை.

**மெய்யுணர்வுக்கான வழிமுறை (அளவைவாதம்)**

சைவ சமயக் கொள்கையின்படி, மெய்ப் பொருளை அறிவதற்குக் காண்டல், கருதல், உவமம், ஆகமம் போன்ற அளவைகள் பயன்படுகின்றன. பௌத்த அளவைவாதிகள் பிற சமயத்தவர் கூறும் அளவைமுறைகளில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி மறுக்கின்றனர். குறிப்பாக, சைவத் தத்துவ வாதிகள் முன்வைத்த சில அளவை முறைகள் மெய்யுண்மையை முழுமையாக உணர்த்துவதில்லை எனக் காப்பியம் வாதிடுகிறது. மெய்யுணர்வு இன்றி, இம்மை மறுமைப் பிறவிகள் உள என்பதை நம்ப முடியாது என்றும் மணிமேகலை தனது உரையாடலின் மூலம் வலியுறுத்துகிறாள்.

**வீடுபேறு / முக்தியின் இயல்பு** சைவம், பதி, பசு, பாசம் ஆகிய மூன்றின் அடிப்படையில் முக்தியை விளக்குகிறது. உயிர்கள் (பசு) பதியுடன் (இறைவனுடன்) இரண்டறக் கலப்பதே முக்தி எனச் சைவ சித்தாந்தம்

கூறுகிறது.

பௌத்தத்தின் நிர்வாணம் என்பது பிறவிச் சுழற்சி மற்றும் துன்பம் முற்றிலுமாக அற்றுப்போன ஒரு நிலையைக் குறிக்கிறது. இது சைவத்தின் இறைவனுடன் இணைதல் என்ற கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டது. பௌத்தம், அறம் (கருணை) மற்றும் ஞானத்தின் வழியே துன்பத்தை அறுப்பதையே இறுதிநிலையாகக் காண்கிறது. மணிமேகலையின் 'பசிப்பிணி நீக்கும் அறம்' என்ற கொள்கை, தனிப்பட்ட ஆன்மாவுக்கான முக்தியைத் தாண்டி, சமூகக் கருணையை முதன்மைப்படுத்தி, சைவக் கடவுளரின் படைப்புத் தத்துவத்தை மௌனமாகவே கேள்விக்கு உள்ளாக்குகிறது. இவ்வாறாகச் சைவத்தைத் தவிர்த்த ஏனைய சமயக் கருத்துக்களையும் மணிமேகலைக் காப்பியம் மறுக்கும் வாய்ப்புகள் நிறையவே காணப் படுகின்றன.

மணிமேகலை ஒரு சமயப் பரப்புரைக் காப்பியம் என்பதால், அதன் முதன்மை நோக்கம் பௌத்த சமயத்தின் உயர்வை நிலைநாட்டுவதும், சமகாலத்தில் நிலவிய பிற சமயங்களின் கோட்பாடுகளின் போதாமையைச் சுட்டிக் காட்டுவதுமேயாகும். சைவம் மட்டுமின்றி, வஞ்சி மாநகரில் மணிமேகலை கேட்டு அறிந்த மற்ற அனைத்துச் சமயங்களின் கருத்துக்களும் பௌத்தத்தின் பார்வையில் எவ்வாறு விவாதிக்கப்படுகின்றன, அல்லது மறுக்கப் படுகின்றன என்பதைப் பார்க்கும் போது மணிமேகலையில் மறுக்கப்படும் ஏனைய சமயக் கருத்துக்கள் என்று பார்க்கும்பது மணிமேகலையின் 27ஆம் காதையான சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் பேசப் படும் முக்கிய சமயங்கள் மற்றும் அவற்றின் மறுப்புக் குறிப்புகள் என்பவற்றில் சமணம், ஆசீவகம், வைணவம், பூதவாதம், அளவை வாதம் என பலவற்றைக் கூறலாம். இவை ஒவ்வொன்றையும் தனித் தனிதனியாக நோக்கலாம்.

**பௌத்த மறுப்புக் கோட்பாடுகள்**

**சமணம் (நிகண்டவாதம்)**

**சமணக் கருத்துக்கள்**

சமணம் (நிகண்டவாதம்) ஜீவன் (உயிர்) என்பது பரமாணுக்களின் வடிவமாகவும், நல்வினை தீவினை காரணமாக இன்ப துன்பங்களை அனுபவிப்பதாகவும் கூறுகிறது. பௌத்தம், அணுவின் நிரந்தரத் தன்மையை யும், ஆத்மாவின் நிலையான இருப்பையும் மறுக்கிறது. சமணம் கூறும் தவமுறைகள் மற்றும் உண்ணாநோன்பின் மூலம் மட்டுமே முக்தி அடைவது என்ற கருத்தைவிட, பௌத்தத்தின் மத்தியமப் பிரதிபதை (நடுவுநிலை வழி) மற்றும் கருணை வழி அறம் சிறந்தது என மணிமேகலை வலியுறுத்துவது சமணக் கொள்கைக்கு எதிரான நிலைப்பாடாகும்.

**ஆசீவகம்**

**ஆசீவகக் கருத்துக்கள்:** ஆசீவகத்தின் முக்கியக் கொள்கை ஊழ்வினைக் கொள்கையின் தீவிரமான வடிவம் ஆகும். அனைத்தும் விதிப்படியே நடக்கும், மனித முயற்சியால் எதையும் மாற்ற முடியாது என்று அது நம்புகிறது. ஆனால் பௌத்தம், கர்ம வினையை ஏற்றுக்கொண்டாலும், தற்போதைய மனித முயற்சியால் (நற்செயல்களால்) வினையின் தாக்கத்தைக் குறைக்கவும், பிறவியின் சங்கிலியை அறுக்கவும் முடியும் என்று கூறுகிறது. ஆசீவகத்தின் இயக்க மறுப்புக் கொள்கைக் கும், பௌத்தத்தின் நற்செயல்களால் துக்கத்தை நீக்க முடியும் என்ற கொள்கைக் கும் அடிப்படை முரண்பாடு உள்ளது.

**வைணவம் (பிரம வைணவ வேதவாதங்கள்)**

**வைணவக் கருத்துக்கள்:** பிரமனும் விஷ்ணுவும் படைப்பு மற்றும் காத்தல் தொழிலைச் செய்கின்றனர்; வேதங்களே இறுதி உண்மை எனக் கூறுகின்றனர். சைவத்தைப் போலவே, ஒரு நிரந்தரமான படைப்புக் கடவுளின் இருப்பை பௌத்தம் மறுக்கிறது. வேதங்கள் மட்டுமே இறுதி உண்மை என்ற கொள்கையையும், மனிதர் கள் கடைப்பிடிக்க வேண்டிய வருணாசிரம தருமத்தையும் பௌத்தம் ஏற்றுக்கொள்வ தில்லை. மாறாக, எல்லா மக்களுக்கும்

பொதுவான தருமமே (கருணை, அறம்) முக்கியம் என பௌத்தம் வாதிடுகிறது.

**பூதவாதம் (உலோகாயதம்)**

**பூதவாதக் கருத்துக்கள்:** பூதங்களே (நிலம், நீர், தீ, காற்று) உண்மை; கண்கூடாகக் காண்பது மட்டுமே உண்மை (பிரமாணம்). இம்மை மறுமைப் பிறவிகள் இல்லை; கள் குடிக்கும்போது வரும் களிப்பு போன்றதுதான் பூத உணர்வு இதுவே காப்பியத்தில் மிகத் தீவிரமாக மறுக்கப்படும் கொள்கையாகும். பௌத்தம் இம்மை, மறுமை, பிறவிச் சுழற்சி, வீடுபேறு ஆகியவற்றை நம்புகிறது. எனவே, உடல் அழிந்தால் உயிர் இல்லை, அறம்/பாவம் இல்லை என்று கூறும் பூதவாதக் கொள்கை பௌத்தத்தின் அடிப்படைக் கருத்துக்களுடன் நேரடியாகவே மோதுகிறது.

**அளவைவாதம் (தர்க்க வாதங்கள்)**

**அளவைக் கருத்துக்கள்:** வெவ்வேறு சமயவாதிகள் 'உண்மையை அறியும் கருவி கள்' (பிரமாணங்கள்) குறித்து வெவ்வேறு எண்ணிக்கையிலான கொள்கைகள (காண்டல், கருதல், உவமம், ஆகமம், அபாவம் எனப் பல) முன்வைக்கின்றனர்.

பௌத்தத்தின் தத்துவவாதிகள், மற்ற சமயங்கள் முன்வைத்த தர்க்க முறைகளில் உள்ள பிழைகள் மற்றும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி மறுக்கின்றனர். இதன் மூலம், பௌத்தத்தின் அளவை முறைகளே (காண்டல், கருதல்) தெளிவாகவும் தர்க்கபூர்வமாகவும் உள்ளன என நிலைநிறுத்தப்படுகிறது.

சுருக்கமாகக் கூறின் மணிமேகலை, காப்பியம் பௌத்தத்தைத் தவிர்த்து மற்ற அனைத்துச் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளை யும் மறுக்கும் நோக்கத்திலேயே வடிவமைக்கப் பட்டுள்ளது எனலாம்.

**பிற காப்பிய சமய கருத்துக்கள்**

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி மணிமேகலைக் காப்பித்தினைப் போல பிறசமயங்களின் கொள்கைகளை மறுத்துத்தன் சமயமான பௌத்தம் சிறந்தது என்று நிறுவும் பாங்கில் அமைந்துள்ளது. இது போல ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான நீலகேசி சமய மறுப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து நிற்கிறது. இக்காப்பியம் ஒரு சமணக்காப்பியம். இது பௌத்த காப்பியமான குண்டலகேசியின் கொள்கைகளை மறுத்து சமணக் கொள்கைகளை நிலை நாட்ட எழுந்த காப்பியமாகப் பார்க்கப்படுகிறது.

ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான தமிழ் நிலக் காப்பியமாக பார்க்கப்படும் சிலப்பதிகாரம் மணிமேகலையைப் போல பிற சமயங்களின் கொள்கைகளை நேரடியாக மறுக்கும் பகுதிகள் கூறப்படவில்லை. இது ஒரு சமணக் காப்பியமாக இருந்தாலும் சைவம், வைணவம், சமணம் என அனைத்தை யும் அரவணைத்துச் செல்கின்ற பாங்கினைக் காணலாம். இளங்கோவடிகள் சமணம், சேரன் செங்குட்டுவன் சைவம், கூலவாணிகச் சீத்தலைச்சாத்தனார் பௌத்தம் என்ற மூன்று வேறுபட்ட மதங்களைச் சார்ந்தவர் களின் உறவினை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு காப்பியம்.

காப்பிய இலக்கணம் அனைத்தும் அமையப் பெற்று மொழி பெயர்ப்புப் காப்பியமாக காணப்படும் சீவகசிந்தாமணி ஒரு சமணக் காப்பியம். இக்காப்பியம் துறவறம், நிலையாமை, அகிம்சை என்பவற்றை வலியுறுத்தி நிற்கிறது. ஏனைய சமயக் கருத்துக்களை மறுப்பது இக்காப்பியத்தின் நோக்கம் அல்ல சமணக் கடவுள் அறக் கருத்துக்களையும் முதன்மைப்படுத்தும் பாடல்களே இதிற் காணப்படுகின்றன.

**ஒவாது நின்ற குணத்து ஒள்நிதிச் செல்வன் என்ப**

**தேவாதி தேவன் அவன் சேவடி சேர்து மன்றே**

(சீவகசிந்தாமணி கடவுள் வாழ்த்து)

மணிமேகலைக் காப்பியத்தின் சமய மறுப்பு என்பது, நேரடியாக ஏனைய காப்பியங்களின் மையக் கருத்தை மறுப்பதைக் காட்டிலும், ஏனைய சமயங்கள் முன்வைக்கும் கொள்கைகள் முழுமை பெறாதவை என்றும், பௌத்தமே முழுமையான

அறத்தையும் வீடுபேற்றையும் தரும் என்றும் நிலைநாட்டுவதிலேயே அதிகம் கவனம் செலுத்துகிறது. இக்காப்பியத்தின் தலைவி மணிமேகலை, உலகியல் இன்பங்களை மறுத்துத் துறவு பூண்டு, இறுதியில் தான் தழுவிய பௌத்த சமயமே பிற சமயங்களை விடச் சிறந்தது என்று தர்க்க ரீதியாக நிறுவுவதும் குறிப்பிடத்தக்கது.

இக்காப்பியத்தின் இறுதிப் பகுதியாகிய "சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை"யில், மணிமேகலை சமணம், ஆசீவகம், சாங்கியம், நியாயம் முதலான ஒன்பது சமயங்களின் தத்துவங்களை அவற்றின் வல்லுநர்களிடமே கேட்டு, அவற்றின் நிறைகுறைகளை ஆய்ந்து அறிகிறாள். இறுதியாகப், பௌத்தத்தின் நிலையாமைக் கோட்பாடு (அனைத்தும் அழிவுடையன), வினைக்கோட்பாடு (செயல்களின் விளைவு) மற்றும் அறநெறிப் போதனைகளே பிறப்பறுத்து வீடுபேறு அடையத் துணையாகும் என்ற முடிவுக்கு வருகிறாள்.

எனவே, மணிமேகலைக் காப்பியம், வெறுமனே ஒரு பௌத்தக் கதையாக மட்டும் அமையாமல், அக்காலத்திலே தமிழகத்தில் நிலவிய பல்வேறு தத்துவச் சிந்தனைகளை விரிவாக முன்வைத்து, அவற்றை விவாதித்து, இறுதியிற் பௌத்தத்தின் மேலாண்மையையும் உண்மையையும் நிலைநாட்டிய முழுமையான சமய மறுப்புக் காப்பியம் (Philosophical polemic) என்ற தனித்தன்மையுடன் திகழ்கின்றது என்பது புலனாகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. சீத்தலைச் சாத்தனார். மணிமேகலை. உரை: உ.வே. சாமிநாதையர். சென்னை: உ.வே.சா. நூல் நிலையம்.
2. சீத்தலைச் சாத்தனார். மணிமேகலை. உரை: பேரா. ஜெ. ஸ்ரீசந்திரன். சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.
3. இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். உரை: உ.வே. சாமிநாதையர். சென்னை: உ.வே.சா. நூல் நிலையம்.
4. திருவள்ளுவர். திருக்குறள். பரிமேலழகர் உரை. சென்னை: கழக வெளியீடு.
5. திருமூலர். திருமந்திரம். சென்னை: திருமந்திர அறக்கட்டளை.
6. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். சென்னை: ஸ்ரீவைஷ்ணவ நூற்பதிப்பகம்.
7. மாணிக்கவாசகர். திருவாசகம். சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
8. சேக்கிழார். பெரியபுராணம். சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
9. மயிலை சீனி. வேங்கடசாமி. பௌத்தமும் தமிழும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. மயிலை சீனி. வேங்கடசாமி. சமணமும் தமிழும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
11. கா. சுப்பிரமணிய பிள்ளை. தமிழர் சமய வரலாறு. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
12. கு. தாமோதரன். இந்தியத் தத்துவ மரபு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
13. ந. சுப்பிரமணியன். தமிழக வரலாறு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
14. வ.சு. மாணிக்கம். தமிழ்க் காப்பியங்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
15. மு. வரதராசனார். தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: சாகித்ய அகாதெமி.
16. க. கைலாசபதி. தமிழ் வீரநிலைக் கவிதை. சென்னை: குமரன் பதிப்பகம்.
17. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார். தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: சர்வோதய இலக்கியப் பண்ணை.
18. Kamil Zvelebil. The Smile of Murugan: On Tamil Literature of South India. Leiden: Brill, 1973.
19. A. L. Basham. The Wonder That Was India. New Delhi: Rupa Publications.
20. S. Radhakrishnan. Indian Philosophy (Vols. I & II). New Delhi: Oxford University Press.

இணையவழி ஆதாரங்கள்

1. தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy).
2. Project Madurai – தமிழ் மின்னூல் திட்டம்.
3. Tamil Digital Library.
4. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் – ஆய்விதழ்கள் மற்றும் மின்னூல்கள்.